தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

*******

ஆணை எண். 008/2020

நாள். 24.11.2021

| | | |
|---|---|---|
| திரு. P. சுதர்ஸன்,<br>நூம்பல், சென்னை | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையாளர்<br>திருவேற்காடு நகராட்சி | – | எதிர்மனுதாரர் |

சென்னை, நூம்பல், G1 கேபிடல் என்க்லேவ், ஜட்ஜ் காலனி, பிளாட் 17 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. P. சுதர்ஸன், அவர்களின் நாளிடப்படாத முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.01.2020 அன்று பெறப்பட்டு 008/2020 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு எதிர்மனுதாரர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவர்களிடம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கைகள் ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, நூம்பல், G1 கேபிடல் என்க்லேவ், ஜட்ஜ் காலனி, பிளாட் 17 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. P. சுதர்ஸன், என்பவரின் நாளிடபடாத மனுவில் திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட நூம்பல் கிராம பகுதியில் உள்ள ராஜாஸ் பூங்காவின் அபிவிருத்தி பணிகள் 20 சதவிகிதம் கூட முடிக்கப்படவில்லை எனவும் இது சம்பந்தமாக நகராட்சி அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என புகார் தெரிவித்துள்ளார். ஒப்பந்த விதிகளின்படி இப்பூங்கா அமைக்கும் பணிகள் 6 மாத காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் எனவும் பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கபடாததால் இது சம்பந்தமாக மேற்கொண்ட ஒப்பந்தம் இரத்து செய்யப்பட வேண்டும். ஆனால் திருவேற்காடு நகராட்சி நிர்வாகம் ஒப்பந்தத்தை இரத்து செய்யவில்லை. மேலும் நகராட்சி நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால்

இப்பூங்கா அமைக்க அனுமதி அளிக்கப்பட்ட ரூ.47.00 இலட்சம் (ரூபாய் நாற்பத்தி ஏழு லட்சம் மட்டும்) முழுவதும் செலவிடப்படாமல் உள்ளதாக புகாரில் மனுதாரர் தெரிவித்துள்ளார். வரையறுக்கப்பட்டுள்ள காலத்திற்குள் பூங்கா அமைக்கும் பணிகள் முடிக்கபடாத காரணத்தினால் அதற்கான அபராதம் விதிக்கவோ அல்லது உரிய நடவடிக்கையோ நகராட்சி நிர்வாகம் எடுக்க தவறிவிட்டது. மேற்காணும் புகார்களை தெரிவித்த முறையீட்டு மனுதாரர் திரு. P. சுதர்ஸன் அவர்கள் கீழ்க்காணும் கோரிக்கைகளை தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்க கோரி முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

(i) பூங்கா மேம்பாட்டு பணிகள் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து குறித்த காலத்திற்குள் முடிக்கபட வேண்டும்.

(ii) ராஜாஸ் பூங்காவின் தற்போதைய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தை இரத்து செய்து அவர் பெயரை கருப்பு பட்டியலில் (Black list) சேர்த்து வருங்காலத்தில் ஒப்பந்த பணிகளிலிருந்து அவரை விலக்க வேண்டும்.

(iii) ஒப்பந்தகாரரின் மீது உரிய நடவடிக்கை எடுக்க தவறிய நகராட்சி அதிகாரிகளை தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. இதனை தொடர்ந்து இம்முறைமன்ற அழைப்பாணை எண்.008/ந/2020-4 நாள்.05.04.2021 மூலம் இந்நேர்வில் மனுதாரர் திரு.சுதர்ஸன், சென்னை மற்றும் எதிர்மனுதாரர் திருவேற்காடு நகராட்சி ஆணையர் ஆகியோரை முறைமன்ற நடுவ அலுவலகத்தில் 26.04.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் கொரானா தொற்று போன்ற காரணங்களால் விசாரணை குறிப்பிட்ட நாளில் நடத்தப்படவில்லை. தேதி குறிப்பிடப்படாமல் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டு அத்தகவல் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவருக்கும் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது. மீண்டும் விசாரணை 31.08.2021 அன்று மேற்கொள்ள நிர்ணயம் செய்யப்பட்டு இம்முறைமன்ற அழைப்பாணை நாள் 11.08.2021 மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்நேர்வு சம்பந்தமாக 31.08.2021 அன்று நடந்த விசாரணையில் முறையீட்டு மனுதாரர் திரு. P. சுதர்ஸன், ஆஜராகவில்லை. 31.08.2021 அன்று நடந்த விசாரணையில் திருவேற்காடு நகராட்சி ஆணையர் சார்பாக நகராட்சி பொறியாளர் விசாரணைக்கு ஆஜரானர். அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. நகராட்சி பொறியாளர் தனது வாக்குமூலத்தில்

சென்னை திருவேற்காடு நகராட்சி ராஜாஸ் கார்டன் பகுதியில் அமைந்துள்ள பூங்காவில், பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் ஒதுக்கப்படும் வளர்ச்சிக் கட்டணம் மற்றும் திறந்தவெளி கட்டணம் மூலம் பெறப்படும் மானியத் தொகையில் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் மற்றும் சிறுவர் பூங்கா அமைக்க ஒப்பந்தப் புள்ளிகள் 21.08.2018-ல் கோரப்பட்டது. இதன் மதிப்பீட்டுத் தொகை ரூ.47 லட்சமாகும். 1.1 ஒப்பந்ததாரரான M/s. S P Builders என்கின்ற ஒப்பந்ததாரரால் மேற்கண்ட பணியினை முடிக்க கால தாமதம் செய்யப்பட்டதால்,

அப்பணி குறித்த காலத்திற்குள் முடிக்கப்படவில்லை. பணிகள் முடித்திட ஒப்பந்ததாரருக்கு கால அவகாசம் கொடுக்கப்பட்டு, தற்போது மேற்கண்ட பூங்காவில் சுற்றுச்சுவர், காலரி மற்றும் நடைபாதைகள் அமைக்கும் பணிகள் சென்ற வாரம் முடிவடைந்தது. மேற்கண்ட பூங்காப் பணிகள் மேற்கொள்ள கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம், பணிகள் மேற்கொண்டு முடித்திட விதிக்கப்பட்ட கால அவகாசம், நகரமைப்புத் துறையின் குறிப்பு (Town Planning remarks) பூங்காவில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து இனம் வாரியான விவரம், ஒப்பந்ததாரரால் மேற்கொண்ட பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்படாததற்கு ஏதேனும் அபராதம் விதிக்கப்பட்டிருந்தால் அல்லது Liquidity damage குறித்த விவரம், மேற்கண்ட பணிகளை முடித்திட நகராட்சியால் ஒப்பந்ததாரருக்கு அளிக்கப்பட்ட கால நீட்டிப்பு குறித்த விவரம், மற்றும் இந்நேர்வு தொடர்பான தெளிவான அறிக்கையினை அடுத்த விசாரணையில் ஆஜராகி இம்முறை மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்தார்.

3. விசாரணையின் போது திருவேற்காடு நகராட்சி பொறியாளர் அவர்களால் இந்நேர்வில் முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமான பதில்கள் கொடுக்க இயலவில்லை. எனவே, இந்நேர்வில் திருவேற்காடு நகராட்சியின் தற்போதைய ஆணையர், முன்னாள் ஆணையர் திரு.செந்தில்குமரன் (தற்போது உதவி ஆணையாளர், வேலூர் மாநகராட்சி, வேலூர்), முன்னாள் நகராட்சி பொறியாளர் திரு.ஆனந்தஜோதி (தற்போது நகராட்சி பொறியாளர், தாம்பரம் நகராட்சி, தாம்பரம்) மற்றும் நகராட்சி மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு ஆகியோரிடம் 13.09.21 அன்று விசாரணை மேற்கொள்ள நிர்ணயம் செய்யப்பட்டது. அவ்வண்ணம் இம்முறைமன்ற முறையீட்டு மனு எண்.008/ந/2020 நாள்.02.09.2021 அழைப்பாணை மூலம் மேற்காணும் அதிகாரிகள் 13.09.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடக்கும் விசாரணைக்கு ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

4. 13.09.2021 அன்று நடந்த விசாரணையில் திருவேற்காடு நகராட்சியின் தற்போதைய ஆணையர், தற்போதைய நகராட்சி பொறியாளர் மற்றும் முன்னாள் நகராட்சி ஆணையர் திரு.செந்தில்குமரன் (தற்போது உதவி ஆணையாளர் வேலூர் மாநகராட்சி, வேலூர்) ஆகியோர் ஆஜராகினர். விசாரணையில் கலந்து கொண்ட திருவேற்காடு நகராட்சி முன்னாள் ஆணையர் திரு.S.செந்தில்குமரன் அவர்கள் அளித்த வாக்குமூலத்தில்

"திருவேற்காடு நகராட்சி நூம்பல் பகுதியில் அமைந்துள்ள ராஜாஸ் கார்டன் பகுதியில் உள்ள பூங்காவின் மேம்பாட்டுப் பணிகளுக்காக M/s. S.P. Builders என்கின்ற ஒப்பந்ததாருக்கு பணியினை முடித்திட உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தம் 31.08.2018 அன்று ஒப்பந்தம் செய்யப்பட்டது. மேற்கண்ட பணிகள் முடிக்கப்பட வேண்டிய காலம் 6 மாத காலமாகும். அதாவது 28.02.2019 அன்று முடிவடைந்திருக்க வேண்டும். ஆனால் ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பணியை முடிக்கவில்லை. திருவேற்காடு நகராட்சி ஆணையராக நான் பணியில் சேர்ந்த நாள் 17.11.2019 ஆகும். பணியில் சேர்ந்த உடனேயே 18.11.2019 அன்று பணியில் உள்ள தாமதம் குறித்து ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு கொடுத்துள்ளேன். இதனைத் தொடர்ந்து ஒப்பந்ததாரரால்

மேற்கண்ட பூங்காவில் சுற்றுச் சுவர் ஜனவரி 2020-ல் அமைத்துள்ளார். இது தொடர்பாக அளவு புத்தகத்தில் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பணிகள் மேலும் தாமதாவதை கருத்தில் கொண்டு 10.01.2020 மற்றும் 17.02.2020 அன்றும் ஒப்பந்தாருக்கு அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஒப்பந்ததாரர் தனது 18.02.2020 நாளிட்ட கடிதத்தில் தனது உடல்நலத்தை காரணம் காட்டி ஒப்பந்த காலத்தை கால நீட்டிப்பு செய்திட வேண்டியுள்ளார். மார்ச் 2020-ல் பெருந்தொற்று கொரானா பரவியதையடுத்து கொரானப் பணிகளில் கவனம் செலுத்தியதால் மேற்கண்ட பணியில் கவனம் செலுத்த இயலவில்லை. ஒப்பந்ததாரரால் குறித்த காலத்திற்குள் பணிகளை முடிக்காததால் அவருக்கு அபராதம் ஏதும் விதிக்கப்படவில்லை. இது தொடர்பான கடிதத்தின் நகல், அறிவிப்புகளின் நகல், பணி உத்தரவு மற்றும் ஒப்பந்த நகல் ஆகியவற்றையும் இம்மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்தார்.

5. 28.01.2020 நாளிட்ட இம்முறைமன்ற அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுதாரரின் மனு மீதான விளக்க அறிக்கையினை அளிக்குமாறு திருவேற்காடு நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. திருவேற்காடு நகராட்சி ஆணையர் கடிதங்கள் 19.03.2020 மற்றும் 13.09.2021 நாளிட்ட கடிதங்களில் கீழ்க்காணுமாறு விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளது:-

19.03.2020 நாளிட்ட கடிதத்தில் திருவேற்காடு நகராட்சி ஆணையர் "ராஜாஸ் கார்டன் பகுதியில் அமைந்துள்ள பூங்காவில் சிறுவர் பூங்கா மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.47.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.405, நாள்.29.06.2018-ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்கண்ட பணிக்கு 21.08.2018-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புநோக்கு செய்யப்பட்டதை இந்நகர்மன்ற தீர்மான எண்.467 நாள்.30.08.2018-ன்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, பணியினை மேற்கொள்ள 30.08.2018 அன்று M/s. S.P.Builders ஒப்பந்ததாரர் அவர்களுக்கு 6 மாத காலத்திற்குள் பணியினை முடிக்குமாறு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி பணியினை விரைந்து முடித்திட அறிவுறுத்தியும், பணியில் எவ்வித முன்னேற்றம் இல்லாது குறித்தும் ஒப்பந்ததாருக்கு 18.11.2019, 10.01.2020 மற்றும் 17.02.2020 ஆகிய தேதிகளில் அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது. இந்நிலையில் M/s. S.P.Builders ஒப்பந்ததாரரால் 18.02.2020 அன்று அளிக்கப்பட்ட கடிதத்தில் தன்னுடைய உடல் நலம் பாதிப்படைந்து மருத்துவ சிகிச்சை பெற்று வந்ததால் தன்னுடைய பணியினை தொடர்ந்து மேற்கொள்ள இயலவில்லை என்றும், நகராட்சிக்கு தகவல் அளிக்கும் சூழ்நிலையில் தன்னுடைய உடல் நிலை சரியில்லாத நிலை ஏற்பட்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளார். மேலும், தற்போது தான் குணமடைந்து மேற்கண்ட பணியினை துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. எனவும், மேற்படி ராஜாஸ் கார்டன் பூங்கா பணியினை விரைந்து முடித்து விடுவேன் என்றும், மேற்கண்ட பூங்கா பணியினை மேற்கொள்ளும் நிலையில் அப்பணிக்காலத்தினை 4 மாத காலத்திற்கு நீட்டிப்பு வழங்கிடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளதை தொடர்ந்து, மேற்கண்ட ஒப்பந்ததரரின் மனு மீது ஆய்வு செய்யப்பட்டு மேலும் 4 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து நகராட்சி ஆணையர், திருவேற்காடு

அவர்களால் 18.02.2020 அன்று நீட்டிப்பு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி பூங்கா அபிவிருந்தி பணிகள் தற்போது சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு, கேட் அமைக்கப்பட்டு முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. எனவே, மேற்படி பணி 30.06.2020-க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

6. மேற்சொல்லப்பட்ட அறிக்கையை தொடர்ந்து 13.09.2021 நாளிட்ட கடிதத்தில் திருவேற்காடு நகராட்சி ஆணையர் அவர்கள் ஒப்பந்தகாரர் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்று இன்னும் அதிக அளவில் வேகமாக பரவி வருவதாலும், மத்திய மற்றும் மாநில அரசுகள் மூலம் ஊரடங்கு உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டதால் பணிகள் மேற்கொள்ள இயலாத சூழல் ஏற்பட்டது. மேலும், இச்சூழ்நிலையால் பணியாட்கள் பணிக்கு வர அச்சம் தெரிவிப்பதாக தெரிவித்துள்ளார். இந்நிலையில் மேற்படி பணி நடைபெறாமல் இருந்ததால், 11.03.2021 மற்றும் 12.04.2021 அன்று பணியினை ரத்து செய்து சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஒப்பந்ததாருக்கு இந்நகராட்சி கடித எண்.1155/2018/E/1 வாயிலாக அறிவிப்பு வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரர் பணியினை துவங்கி மேற்கொள்ளும் போது அப்பகுதி மக்கள் மேற்படி பகுதியில் மேலும், இரண்டு பூங்கா இருப்பதாலும், இந்த ராஜாஸ் கார்டன் பூங்கா பகுதியில் மாணவர்கள் Foot Ball, Shuttlecock, Cricket போன்று விளையாடுவதற்கு போதிய இட வசதி இல்லாததால், இப்பூங்காவில் தெற்கு பகுதியில் Amphitheatre அமைத்து வழிவகை செய்யுமாறு கோரிக்கை வைத்தனர். இதனை தொடர்ந்து, ஆய்வு செய்யப்பட்டதில் ஏற்கனவே, அப்பகுதியில் மேலும் இரண்டு பூங்காக்களில் குழந்தைகள் விளையாட அனைத்து விளையாட்டு உபகரணங்கள் இருக்கும் நிலையில் இப்பூங்காவில் Amphitheatre அமைக்க இந்நகராட்சி தீர்மான எண்.1464 நாள்: 31.05.2021 ன்படி இப்பூங்காவின் ஒரு பகுதியில் Amphitheatre (Gallery) அமைக்கப்பட்டது. மேலும், தற்போது குழந்தைகள் விளையாட Sea-saw, Swing, Slide போன்ற உபகரணங்கள், பெரியவர்கள் பயன்படுத்தும் உபகரணங்கள் Hip Twister, Air Walker, shoulders Big circle, Seated leg press போன்ற உபகரணங்கள், மரங்கள் என அனைத்து பணிகளும் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது என தெரிவித்துள்ளார்.

7. முறையீட்டு மனுதாரரின் மனு, திருவேற்காடு நகராட்சி முன்னாள் ஆணையாளர், தற்போதைய நகராட்சி பொறியாளர் அளித்த வாக்குமூலங்கள், திருவேற்காடு நகராட்சி ஆணையர் அளித்த அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன.

8. திருவேற்காடு நூம்பல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவின் அபிவிருத்தி பணிகளில் ஆரம்பம் முதலே குளறுபடிகள் நடந்துள்ளதாக தெரிய வருகிறது. ரூ.47.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்த பணி 30.08.2018 அன்று M/s. Builder ஒப்பந்தகாரர் அவர்களுக்கு 6 மாத காலத்திற்குள் பணியினை முடிக்குமாறு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலத்திற்குள் பணி முடிக்கபடாத நிலையில் 17.02.2020 வரையில் சுமார் இரண்டு வருடங்களாக ஒப்பந்தத்தை ரத்து செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அறிவிப்பு கடிதங்கள் மட்டும் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டு வந்துள்ளது கண்துடைப்பு செயலாகும். இது ஒப்பந்தகாரரின் முறைகேடுகளுக்கு துணை

போகும் செயலாகும். பூங்கா பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்காததால் ஒப்பந்த புள்ளியை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாகம் தவறி உள்ளது. இச்செயலை, இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

9. மேலும் இப்பூங்கா அருகில் இரண்டு பூங்காக்கள் ஏற்கனவே இருப்பதால் இப்பூங்காவின் ஒரு பகுதியில் கேலரி (Amphitheatre) அமைக்க நடவடிக்கை எடுத்ததாக நகராட்சி ஆணையர் தன் அறிக்கையில் தெரிவித்திருப்பதும் ஏற்கதக்கதல்ல. கேலரி என்பது விளையாட்டு மைதானத்தில் நடக்கும் விளையாட்டு போட்டிகளை பார்வையிட மக்கள் அமர்ந்து பார்ப்பதற்காக ஏற்படுத்தப்படும் வசதியாகும். இது நகராட்சி பொழுது போக்கு பூங்கா அமைக்கும் பணிக்கான நோக்கத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாய் உள்ளது. சரியான திட்டமிடாததாலும், பணிகளை சரிவர மேற்பார்வையிட கவனிக்க தவறியதாலும் பொதுமக்கள் பணம் இப்பூங்கா அபிவிருத்தி பணிகளில் வீணடிக்கப்பட்டுள்ளது.

11. எனவே, இப்பூங்கா அபிவிருத்திப் பணிகளில் ஏற்பட்ட முறைகேடுகள் மற்றும் காலதாமதத்தை கண்காணிக்காமலும் உரிய சட்ட பிரிவின் கீழ் ஒப்பந்ததாரரின் மேல் நடவடிக்கை எடுக்க தவறிய சம்மந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடுமாறு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. P. சுதர்ஸன்,
பிளாட் நெ.17D, ஜட்ஜ் காலணி,
ஜி1, கேப்பிடல் என்கேலேவ்,
நூம்பல், சென்னை 600 077.

2) ஆணையாளர்
திருவேற்காடு நகராட்சி,
திருவேற்காடு, சென்னை 600 077.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
உதவி பதிவாளர்
நகல். இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

26/11/21.

செயலாளர்.

26/11/21